**நகர மன்றம், உளுந்தூர்பேட்டை** **நாள். 31.12.2021**

# அறிவிப்பு

உளுந்தூர்பேட்டை நகர மன்ற சாதாரணக் கூட்டம் 31.12.2021ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நகரமன்ற தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமன்ற கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை - திரு. ஆ. சரவணன், பி.எஸ்.சி.,**
**தனி அலுவலர்/ ஆணையர்**
**உளுந்தூர்பேட்டை நகராட்சி**

## கூட்ட நிரல்

| வ.எண் | பொருள்கள் டிசம்பர் 2021 சாதாரணக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி மாவட்டம், வேலூர் மண்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. வரைவு வாக்காளர் கருத்துரு சமர்ப்பிக்க வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.347/2021/ஆ2 நாள்.17.12.2021 கடிதத்தின்படி கருத்துருவில் அடங்கியுள்ள உளுந்தூர்பேட்டை வரைவு வார்டு வரையறை வரைபடம் மற்றும் வரைவு வார்டு வாரியான வரைபடம் Autocad -ல் தயார் செய்வற்கும் அதனை A3 வடிவில் கலர் பிரிண்ட் எடுத்து கருத்துரு சமர்ப்பிக்க உத்தேச செலவினம் ரூ.150000/-க்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம் | 4 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 2. வரைபடம் மற்றும் கல பிரிண்ட் எடுப்பதற்கு ஏற்படும் செலவினத்தை இந்நகராட்சியின் 2வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.768/2021/அ1) | | |
| 2 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பொதுசுகாதார பணி உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது சுகாதார பொருள்கள் போதுமான அளவு கையிருப்பு இல்லாததால், பொது சுகாதார உபகரணங்கள், சமுதாய கழிப்பிடத்திற்கு அபேட் மற்றும் திடக்கழிவு மேலாணமை திட்டத்தில் குப்பைகளை மக்க வைப்பதற்கு இ.எம். சொலிஷன் ஆகிய அத்தியாவசியமான பொருட்கள் கொள்முதல் செய்ய 2021 – 2022 ம் ஆண்டில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொருட்கள் வழங்கிவரும் நிறுவனமான ஹாசினி டிரேடர்ஸ், மரக்காணம் என்ற நிறுவனத்திடமிருந்து மேற்படி பொருட்கள் சப்ளை செய்தமைக்கு தொகை ரூ. 81040/- வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. சமுதாய கழிப்பிடத்திற்கு அபேட் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் குப்பைகளை மக்க வைப்பதற்கு இ.எம். சொலிஷன் கொள்முதல் செய்வதற்கு ஏற்படும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.153 /2021/அ3) | 5 | **அனுமதிக்கப்பட்டது** |
| 3 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது சுகாதார பொருள்கள் போதுமான அளவு கையிருப்பு இல்லாததால், பொது சுகாதார பணிகளான கொசு ஒழிப்பு( டெங்கு), மலேரியா காய்ச்சல் மற்றும் கொரோனா போன்ற தொற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள அத்தியாவசியமான சுண்ணாம்பு நீர் மற்றும் பிளிச்சிங் பவுடர் பொருட்கள் கொள்முதல் செய்ய 2021 – 2022 ம் ஆண்டில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பொருட்கள் வழங்கி வரும் நிறுவனமான ஹர்ஷ்வரதன் எண்டர்பிரைசஸ் மரக்காணம் என்ற நிறுவனத்திடமிருந்து மேற்படி பொருட்கள் சப்ளை செய்தமைக்கு தொகை ரூ. 77100/- வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. | 6 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதார உபகரணங்களான சுண்ணாம்பு நீர் மற்றும் பிளிச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்கு ஏற்படும் செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.153 /2021/அ3) | | |
| 4 | கள்ளக்குறிச்சி மாவட்டம், வேலூர் மண்டலம் உளுந்தூர்பேட்டை நகராட்சியாக தரம் உயத்தப்பட்டது. வரைவு வாக்காளர் கருத்துரு சமர்ப்பிக்க வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந,க.எண்.3471/2021/ஆ2 நாள்.17.12.2021- ன் கடிதத்தின்படி உளுந்தூர்பேட்டை வரைவு வார்டு வாரியான வரைப்படம் கலர், கருப்பு வெள்ளை நகல் மற்றும் A3, A4 நகல் எடுத்தமைக்கு ரூ.11324/-ஐ பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வரைவு வார்டு வாரியான வரைப்படம் கலர், கருப்பு வெள்ளை மற்றும் A3, A4 நகல் எடுக்க பொதுநிதியில்மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.768/2021/அ3) | 7 | **அனுமதிக்கப்பட்டது** |
| 5 | கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது சுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும வாகனங்களான 1. டிராக்டர் – 1, 2, இளரக வாகனம் (TATA ACE) - 2 3. தள்ளுவண்டிகள் (PUSH CART) – 50 ஆகிய வாகனங்கள் மூலம் குப்பைகளை மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து குப்பைகளை மேற்கண்ட டிராக்டர் மற்றும் இளரக வாகனங்கள் மூலம் டிவிஎன் ரோட்டில் உள்ள திடக்கழிவு மேலாண்மை உரத்திடலுக்கு தினமும் எடுத்துச்செல்லப்படுகிறது. இப்பேரூராட்சி அரசாணை நிலை எண்.94 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 01.11.2021 ம் தேதி முதல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியாக மாற்றப்பட்டிதனை ஒட்டி வாகனங்களில் பெயர் பலகை, பெயிண்ட்டிங் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டப்பபடவும், பேரூராட்சி என இருப்பதை நகராட்சி என மாற்றம் செய்வதற்கும், செயல் அலுவலர் என இருப்பதை ஆணையர் மாற்றுவதற்கு பெயிண்ட்டிங் ஓர்க் செய்யவும் மேற்கண்ட வாகனங்களுக்கு சிறு பழுதுகளை சரிசெய்யவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | 8 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. வாகனங்களில் பெயர் பலகையில் பெயிண்ட்டிங் மற்றும் ஸ்டிக்கர் ஒட்டப்படவும், மேற்கண்ட வாகனங்களுக்கு சிறு பழுதுகளை சரிசெய்யவும்) பணியினை அவசரம் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.153 /2021/அ1) | | |
| 6 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான சுடுகாட்டில் அதிக அளவில் முட்புரகள் வளர்ந்தும், பருவ மழையின் காரமாக சாலையில் மழைநீர் தேங்கியும் உள்ளதாலும், இப்புதர்களில் விஷ பாம்புகள் அதிக அளவில் தென்படுவதாலும், பொது மக்கள் பாதையின் வழியாக சடலங்கள் எடுத்துச் சென்று புதைக்க மிகவும் சிரமப்படபட்டுகின்றன. எனவே இப்புதர்களை ஜேசிபி இயந்திரம் கொண்டு சமன் செய்து புரதர்களை அப்புறப்படுத்தவும், மழை நீர் தேங்கா வண்ணம் சாலையினை சமன்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. ஜேசிபி இயந்திரம் கொண்டு சமன் செய்து புரதர்களை அப்புறப்படுத்தவும், மழை நீர் தேங்கா வண்ணம் சாலையினை சமன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.153 /2021/அ3) | 9 | **அனுமதிக்கப்பட்டது** |
| 7 | உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் ஸ்ரீ அங்காளம்மன் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பகத்சிங் சுய உதவிக்குழு ஆகிய இரண்டு குழுக்கள் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஆகஸ்ட் 2021 முதல் வடகிழக்கு பருவ மழை காலத்தில் கூடுதல் பணியாளர்கள் 22 பேரை ஓப்பந்த அடிப்படையில் பணிநியமிக்கப்பட்டு திருமதி. நித்யா என்பவர் தலைமையில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு மன்ற அனுமதி இதுநாள் வரை பெறப்படவில்லை, சுகாதார ஆய்வாளர் குறிப்பினை ஏற்கப்பட்டு ஒரு குழுவாக ஏற்படுத்தி அக்குழுவிற்கு அம்பேத்கர் சுய உதவிக்குழு என பதிவு செய்து அக்குழுவிற்கு ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஊதிய விகித கடிதம் ந.க.எண்.ஜ2/3737/2020 நாள்.04.08.2021–ன்படி ஊதியம் நிர்ணயம் செய்து அக்குழுவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. தற்போது அம்பேத்கர் ஆண்கள் சுய உதவிக்குழு மூலம் பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை, மக்காத | 10 | **அனுமதிக்கப்பட்டது** |

குப்பை என  தரம் பிரித்து  வாங்கும் ஒப்பந்த பணிக்காக பணியமர்த்தப்பட்டு  பணி செய்து வருகின்றனர்.   அப்பணி  பொது மக்களின் நலன் கருதி பாதிக்காமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும் தற்போது  நகராட்சி  நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) துறை அரசாணை  (நிலை) எண்.94 நாள்.01.11.2021-ல் பேரூராட்சியினை நகராட்சியாக தரம் உயர்த்தப்பபட்டது.   இந்நிலையில் சதுப்புரவு பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலமாக டெண்டர் விடப்பட்டு ஒப்பந்த அடிப்படையில்  பணிகள் மேற்கொள்ள வேணடும் எனவும்,  ஒப்பந்த அடிப்படையில்  பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும்  போது பணியாளர்கள் நலன் கருதி EPF மற்றும் ESI ஊதியத்தில் பிடித்தம்  செய்து அதற்கான கணக்கின் கீழ் ஒப்பந்ததாரால் கட்டப்பட வேண்டும். எனவே தற்போதைய சூழ்நிலையில் இந்நிதியாண்டில்  மூன்று மாதஙகளே எஞ்சி உள்ளதால்  டிசம்பர் 2021, ஜனவரி 2022, பிப்ரவரி 2022 மற்றும் மார்ச் 2022 வரை பேரூராட்சியின் நடைமுறையிலேயே தொடர்ந்து ஊதியம் வழங்கலாம், இனி வரும் காலங்களி ஏப்ரல் 2022  மாதம் முதல் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கையின்படி  தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு  அத்தியாவசிய பணிகளை ஒப்பந்தப்புள்ளி/பொதுஏலம் விட்டு அதன் அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் பொதுசுகாதார பணிகள்   மேற்கொள்ளலாம், பணியின்போது பணியாளருக்கு ஏற்படும் அனைத்து விபத்துகளுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள  நிறுவனமே பொறுப்பு ஏற்று  உரிய பணப்பயன்களை வழங்கிடவும் இந்நகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

மேலும் உளுந்தூர்பேட்டை  நகராட்சியில் 2008  ஆம் ஆண்டு முதல்  கணினி  இயக்குபவராக  பணிபுரிந்து வரும் திருமதி. த. புஷ்பா என்பவருக்கு  பேரூராட்சியின் உதவி இயக்குநர் கடலூர் மண்டலம் அவர்களின் கடித எண்.2030-2.2021/பேரூ2  நாள்.06.08.2021-ன் அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை  ஆணை எண்.ஐ2/3737/2020 நாள்.04.08.2021-ன்படி நாள் ஒன்றுக்கு **ரூ.787**/- வீதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ஊதியத்தை  31.03.2022 வரை தொடந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை-28 அவர்களின்  அறிவுரைபெற்று தனியார் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும்,  அவசர அவசியம் கருதி பேரூராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் நலன்கருதி திடக்கழி மேலாண்மை மற்றும்  பொதுசுகாதார பணிகளை செய்திடவும் ஏற்படும் செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
3. இந்நகராட்சியில் கணினி அவசிய அத்தியாவசிய பணியினை கருதி பொதுநிதியில் ஊதியம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.153/2021/அ3)**

| | | | |
|---|---|---|---|
| 8 | கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சி 01.11.2021 முதல் 2வது நிலை நகராட்சியாக அறிவிக்கப்பட்டு வணிக வளாக கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.<br>இவற்றில் புதிய அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கூடுதல் அலுவலர்களுடன் பணிகள் மேற்கொள்ளப்படுவதாலும், இவர்களுக்கு போதிய நாற்காலிகள், கணினிகள், 6 எண்கள் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு நகராட்சி ஆணையாளர் மற்றும் மண்டல இயக்குநர் அவர்களால் நடத்தப்படும் காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் கலந்துகொள்ள ஏதுவாக All in one pc வாங்க தோராய செலவினம் ரூ. 9,00,000/- அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர, அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்.<br>3. பட்டியல்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | 11 | **அனுமதிக்கப்பட்டது** |
| 9 | உளுந்தூர்பேட்டை பேரூராட்சி அரசாணை நிலை எண்.94 நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 01.11.2021 ம் தேதி முதல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 24. வார்டுகளை உள்ளடக்கி, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 23734, தற்போது தோராய மக்கள் தொகை 260720 ஆகும். மேலும் இந்நகராட்சி அலுவலகம் வணிக வளாக கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றது. தற்சமயம் எதிர்வரும் உள்ளாட்சி தேர்தலினை எதிர்கொள்ளவும், ஆணையர் மற்றும் அலுவலர்கள் தனி அறைகள் மற்றும் கேபின் (Cabin) அமைக்கவும், இதற்காக போதிய விளக்குகள், மின் வசதி, Internet போன்ற பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆணையர் மற்றும் அலுவலர்கள் தனி அறைகள் மற்றும் கேபின் (Cabin) அமைக்கவும், இதற்காக போதி விளக்குகள், மின் வசதி, Internet அமைக்கவும் செலவினத்தை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | 12 | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 10 | கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் 8.67 ச.மீ. பரப்பளவில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும், நகரில் 113 எண்கள் (Mini Power Pump) பவர் பம்ப் மூலமாக பொது மக்களுக்கு தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காக உள்ளது.<br>இவற்றில் சில இடங்களில் உள்ள Mini Power Pump borewell- ல் மோட்டார்கள் பொறுத்தவும், பழுதடையும் மோட்டார்களை Coil சரி செய்து இயக்கவும், ஆதாரக் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யவும் தோராய செலவினம் ரூ. 5,00,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர, அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்காலம்.<br>3. குறைந்த விலைப்புள்ளி பட்டியலுக்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். /2022/அ2) | 13 | **அனுமதிக்கப்பட்டது** |

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
உளுந்தூர்பேட்டை நகராட்சி